அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 03/2024

எனது இலக்கம் : EST-5/04/PCY/0019
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2024.01.10

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## 2024 வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு இணங்க அரச சேவையின் வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய பங்களிப்புப் பணம் அறவிடுதல் என்பவற்றில் திருத்தம் செய்தல்

அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட 2024 வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு இணங்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் ஓய்வூதியதாரர்களுக்கும் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப் படி செலுத்துதல் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய பங்களிப்புப் பணம் அறிவிடுதல் என்பன தொடர்பில் பின்வரும் விதத்தில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

02. 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மாதாந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பில் பின்வரும் விதத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2.1 **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு**

I. 2024 மாதம் முதல் மார்ச் மாதம் வரையில் வாழ்க்கைச் செலவுப்படியைச் செலுத்தும் போது தற்போது மாதமொன்றுக்கு செலுத்தப்படும் ரூ. 7,800/- வாழ்க்கைச் செலவுப்படியுடன் 2024 வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு இணங்க அதிகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படியான ரூ. 10,000/- வாழ்க்கைச் செலவுப்படியில் 50% ஆன ரூ. 5,000/- ஐச் சேர்த்து ரூ. 12,800/- ஐச் செலுத்துதல்.

II. 2024 ஏப்ரல் மாதம் முதல் மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படியைச் செலுத்தும் போது, ரூ. 12,800/- வாழ்க்கைச் செலவுப்படியுடன் 2024 வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு இணங்க அதிகரிக்கப்பட்ட ரூ. 10,000/- இன் மீதமுள்ள 50% ஆன ரூ. 5,000/- ஐச் சேர்த்து ரூ. 17,800/- செலுத்துதல்.

III. 2024 ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையிலான நிலுவை வாழ்க்கைச் செலவுப்படியை 2025 ஜனவரி முதல் மார்ச் வரை மாதாந்தம் ரூ. 5,000/- வீதம் செலுத்தி முடித்தல்.

IV. மேலும், 2024.01.01 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் ஓய்வுபெறும்/ முறையாக சேவையில் இருந்து நீங்கும்/ மரணிக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் ஓய்வுபெறும் திகதி/ முறையாக சேவையில் இருந்து நீங்கும் திகதி/ மரணிக்கும் திகதி வரையில் கிடைக்க வேண்டிய 2024 வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு இணங்க அதிகரிக்கப்பட்ட முழுமையான வாழ்க்கைச் செலவுப்படியில் செலுத்தப்படாத நிலுவைத் தொகைகள் இருப்பின், அந்த நிலுவைத் தொகையை அவர்களுடைய இறுதி மாதச் சம்பளத்துடன் செலுத்துதல்.

**2.2 அமய/ நாட் சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு**

2013.12.31 ஆம் திகதிய 37/2013 ஆம் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் தற்போது செலுத்தப்படும் ரூ. 260/- கொடுப்பனவுக்கு மேலதிகமாக மேலே 2.1 இன் I, II, மற்றும் III ஆம் பந்திகளின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் அதிகரிக்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படியின் பெறுமதியை அமய/ நாட் சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு ஒவ்வொரு மாதத்திலும் பணிபுரிந்த ஒரு நாளைக்கு 1/30 என்ற அடிப்படையில் கணக்கிட்டு மேலே 2.1 இன் I, II மற்றும் III ஆம் பந்திகளுக்கு இணங்க மாதமொன்றுக்கு உரித்துடைய தொகையை விஞ்சாத விதத்தில் மேலே 2.1 இன் I, II, III மற்றும் IV இன் கீழ் செலுத்துதல்.

**2.3 பயிலுநர் மற்றும் பயிற்சிபெறுவோருக்கு**

2016.02.25 ஆம் திகதிய 03/2016 ஆம் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் அட்டவணை V இல் உள்ளடங்கியுள்ள பதவிகளுக்கு மேலே 2.1 இன் I, II, III மற்றும் IV இன் கீழ் செலுத்துதல்.

**2.4 முப்படைகளின் அங்கத்தவர்களுக்காக**

முப்படைகளின் அங்கத்தவர்களுக்கு இச்சுற்றறிக்கையில் மேலே 2.1 இன் I, II, III மற்றும் IV ஆம் பந்திகளில் கீழ் கொடுப்பனவு செய்தல்.

**2.5 கௌரவ அமைச்சர்களின் தனியார் பதவியணியினருக்காக**

கௌரவ அமைச்சர்களினதும், கௌரவ இராஜாங்க அமைச்சர்களினதும், கௌரவ பிரதி அமைச்சர்களினதும், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களினதும் அனுமதிக்கப்பட்ட தனிப்பட்ட பதவியணியினருக்கும் மாகாணங்களின் கௌரவ ஆளுநர்களினதும், கௌரவ முதலமைச்சர்களினதும், கௌரவ மாகாண அமைச்சர்களினதும் தனிப்பட்ட பதவியணியினருக்கும், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் செயலாளர்களின் ஒருங்கிணைப்புச் செயலாளர்களுக்கும் இச்சுற்றறிக்கையின் மேல குறிப்பிட்ட 2.1 இன் I, II, III மற்றும் IV ஆம் பந்திகளில் கீழ் கொடுப்பனவு செய்தல்.

2.6 **ஓய்வூதியம் பெறுவோருக்காக**

ஓய்வூதியகாரார்களுக்கு தற்போது செலுத்தப்படும் மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படியை 2024 ஏப்ரல் மாதம் ரூ. 3,525/- இலிருந்து ரூ. 6,025/- வரை அதிகரித்தல்.

03. 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பாக அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்களினதும் சம்பளத்தில் 8% அறிவிடப்பட வேண்டும்.

04. இச்சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் ஒப்புதலின் அடிப்படையில் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்./ பிரதீப் யசரத்ன
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 011 2 673 330
தொலைநகல் : 011 2 692 158
மின்னஞ்சல் முகவரி: ade-v@pubad.gov.lk